STATE LEGISLATURE, MADRAS
6 MAR 1965

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Tuesday, 10th March 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

மழையால் பயிர்ச் சேதம்

*196 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963 டிசம்பர் மாதத்தில் பெய்த பெரும் மழையின் காரணமாக தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமென்றால், எவ்வளவு?

(உ) இச் சேதத்தின் மதிப்பு என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes, Sir.

(b) The extent of damages to crops are as follows :—

Thanjavur district—10,905·38 acres.

Ramanathapuram district—297·00 acres.

Madurai district—265·12 acres.

(c) The value of the damages are as follows :—

Ramanathapuram district—Rs. 37,000.

Madurai district—84,845.

The value of the damages caused to the crops in the Thanjavur district can be assessed only after the intensive azmoish of the affected areas that is being conducted by Revenue authorities is completed.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, do the Government propose to give remission for those agriculturists who have been affected by the heavy rains?

THE HON. SRI V. RAMAIAH: As per the rules, the flood affected areas will get remission if the revenue authorities sanction it.

திரு. செ. மாதவன்: இப்போது கொடுக்கப்பட்டுள்ள கணக்கு விளையாத நிலங்கள் மட்டுமா? அல்லது சிலவிடங்களில் கண்மாயில் தண்ணீர் இருந்தால் அதை விளைந்ததாக எடுத்துக்

[10th March 1964

கொள்ளவேண்டுமென்று சட்டமிருக்கிறதா ? அப்படி எடுத்துக் கொண்டிருந்தால் அது இந்த ஏக்கரேஜிலிருந்து கழிக்கப்பட்டிருக் கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் கொடுத்த கணக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடம்தான்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் என்னென்ன நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்கள் மீண்டும் சாகுபடி செய்ய கடன் உதவி கேட்கிறார்கள், அரசாங்கம் கொடுக்கிறது. குறிப்பாக தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்குதான் அதிக பாகத்திற்கு கெடுதல் ஏற்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் நல்ல விதை பாதி விலைக்கு கொடுக்க ரெவின்யூ இலாகாவிலிருந்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நடவு கூலி போன்ற செலவு களுக்காக உடனடி கடன் உதவி கொடுக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்ட வர்களுக்கு கடன் உதவி அளிப்பது என்ற அளவோடுதான் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே விவசாயிகள் ஏராளமாக கடன்பட்டுத்தான் விவசாயம் செய்திருப்பார்கள். அதை அடைக்க முடியாது புதிய கடன் வாங்கும் நிலை இருக்கிறது. ஆகவே அதை மான்யமாகக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதுபோல் இப்போது உத்தேசம் இல்லை. உடனடியாக எது தேவையோ அதைத்தான் இந்த அரசாங்கம் செய்து கொடுக்கும்.

திரு. சா. ராமசாமி : பெரு மழை காரணமாக திருச்சி மாவட்டத்தில் சில பகுதிகளில் செய்த சாகுபடி எல்லாம் அழியப் பட்டு நிலங்கள் எல்லாம் இரண்டாம் தடவையாக மறுபடியும் பயிர் செய்யப்பட்டு, தற்போது புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் இல்லாததால் இரண்டாம் முறையாகச் செய்த பயிரும் அழியும் நிலையில் இருப்பதால் அவர்களுக்கு இந்த வகை யான வசதிகள் அளிக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த மூன்று ஜில்லாக்களில் மட்டுமல்ல. எந்த ஜில்லாவிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக் கும் நிலைமையிருக்கும் பட்சத்தில் என்னென்ன நிவாரணங்கள் கொடுக்கவேண்டுமோ அதை ஸ்தலத்தில் உள்ள ரெவின்யூ இலாகா அதிகாரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே திருச்சி ஜில்லாவில் என்ன நடந்தது என்பதற்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : டிசம்பரில் ஆரம்பித்த பெரு மழை புயல் ஆரம்பமே தென் ஆற்காடு மாவட்டத்தில்தான் என்று நாங்கள் பார்த்தோம். அரசாங்கமும் ஏற்றுக் கொள்கிறது.

10th March 1964]

ஆகவே தென் ஆற்காடு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்க என்ன உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : தென் ஆற்காடு மாவட்டத்திற்காக விசேஷமாக ஒரு கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தில் எங்கு பாதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தில் நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். வி. கரிவேங்கடம் : ஏற்கனவே நிவாரணம் அளிக்கப்பட்டுவிட்டதா ? அல்லது இனிமேல் நிவாரணம் அளிக்கயிருக்கிறார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : உடனே செய்யவேண்டிய உதவிகளை ரெவின்யூ இலாகாவினர் செய்து கொடுப்பார்கள். இன்னும் சில உதவிகளை பரிசீலனை செய்து ரெவின்யூ இலாகாவில் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பார்கள். குறிப்பாக விதைகள் கொடுப்பது பற்றி இனி மேல் ஆலோசனை செய்வது பிரயோஜனப்படாது.

திரு. செ. மாதவன் : தஞ்சை மாவட்டத்தில் விளைவு பாதிக்கப்பட்டால் புதிதாக நாம் போட்டிருக்கும் செஸ் வரியை 1962-ம் ஆண்டிலிருந்து வசூல் செய்யக்கூடாது என்ற கோரிக்கை வந்திருக்கிறதா ? அது அரசாங்கத்தால் பரிசீலிக்கப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமையா : நான் கொடுத்த பதிலைப் பார்த்தால் தஞ்சை ஜில்லாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பது, 10,905 ஏக்கர்கள்தான். என்னென்ன நிவாரணம் கொடுக்கவேண்டுமோ அதுகுறித்து ரெவின்யூ இலாகாவைச் சார்ந்தவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வெள்ளத்தால் 12, 13 லட்சம் பாதிக்கப்படவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த வெள்ளத்தால் விவசாயிகள் மட்டுமல்ல, கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர் குடிசைகள் எல்லாம் காற்றில் பறந்திருக்கின்றன. ஆகவே அதற்காக என்ன நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது ? அப்படிக் கொடுக்கவில்லை என்றால் இனிமேலாவது கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : அங்கத்தினர் அவர்கள் அவர்களது ஜில்லாவில் என்ன நடந்திருக்கிறது என்று கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டு தெரிந்து கொள்ள முயற்சி எடுத்தால் என்னென்ன நடந்திருக்கின்றன என்பது தெரிய வரும். புயலால் பாதிக்கப்பட்டவர்களில் விவசாயிகள் மட்டும் அன்றி, கடலோர மீனவர்களும் பாதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அவர்களுக்கும் உடனடியாக நிவாரணம் கொடுக்கப்படும். குடிசைகளை மீண்டும் கட்டிக் கொள்ள நிவாரணம், துணி வாங்க நிவாரணம் அளிப்பது இவை எல்லாம் உடனடியாகக் கொடுக்கிறார்கள். மூன்று, நான்கு மாதங்களுக்குப் பிறகு கொடுப்பது அவர்களுக்கு

[10th March 1964

லாபமாகயிருக்காது. பின்பு அவர்கள் விடுகளை புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால் அதற்கு கடன் உதவியும் அரசாங்கம் கொடுக்கும்.

திரு. செ. மாதவன்: அமைச்சர் அவர்கள் கடன் உதவி செய்வதாகச் சொன்னார்கள். ஏற்கனவேயுள்ள வரி பாக்கிகளை இந்தப் பசலியில் வசூலிக்கக்கூடாது என்று அரசாங்கம் உத்தர விட முன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: பாதிக்கப்பட்ட இடத்தில் அவசியமாக அதைத் தள்ளி வைக்கவேண்டுமென்றால் அதையும் அரசாங்கம் செய்யும்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: பாதிக்கப்பட்ட விவசாயி களுக்காவது அரசாங்கம் இந்த செஸ் வரி விலக்கை உடனடியாக அளிக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: செஸ் விலக்கு மட்டுமல்ல. லான்ட் ரெவின்யூவையே தள்ளிவைக்கவேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டால் அதையும் அரசாங்கம் செய்யும்.

Fair price shops for firewood

* 197 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of Fair price shops functioning in Madras City for the sale of firewood;

(*b*) the price at which firewood is sold at present; and

(*c*) the total quantity of firewood sold through these fair price shops, during 1963?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) விறகு விற்பனைக்காக சென்னை நகரில் எட்டு நியாய விலைக் கடைகள் நடைபெற்று வருகின்றன.

(இ) 25 கிலோ கிராம் ரூ. 1·50 என்கிற விலைக்கு இப்போது சிரா விற்கப்பட்டு வருகிறது.

(உ) 1963-ல் இந்த நியாய விலைக் கடைகளின் மூலம் விற்கப் பட்ட மொத்த விறகின் அளவு 1,101 டன் ஆகும்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கிற நெருக்கடி நிலையையொட்டி விறகைப் பொறுத்தவரை இருக்கிற நியாய விலைக் கடைகளை அதிகப் படுத்துகிற எண்ணம் அரசினருக்கு உண்டா? அப்படியென்றால் எத்தனை?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இப்போது இருக்கக்கூடிய எட்டு விறகுக் கடைகளிலும் நாங்கள் எதிர்பார்த்த விற்பனை இல்லை என்று தங்கள் மூலம் மெம்பர் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.